# பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி

[கட்டுரைத் தொகுப்பு]


பதிப்பாசிரியர்

முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்

முனைவர் ஏ. கோதண்டராமன்



அகஸ் பதிப்பகம்

# சிலப்பதிகாரத்தில் சமண, சைவ, பௌத்தக் கோவில்கள்

முனைவர் அ.மகபூபு,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி - 642001.

**ஆய்வுச் சுருக்கம்**

சிலப்பதிகாரம் தமிழ்மொழியில் இயற்றிய முதல் காப்பியம் முத்தமிழ்காப்பியம் இக்ககாப்பியம் முடிமக்கள் மூவருக்குரியக் காப்பியம் என்பது நாம் அறிந்ததே, இக்காப்பியத்தை சமணக் காப்பியம் என்று கூறுவர். ஆனால் இதுவொரு சமயச்சார்பற்றக் காப்பியம் முடிமக்கள் மூவரின் பெருமையும் அவர்நாட்டின் பெருமையைமட்டும் கூறவில்லை அந்நாட்டில் உள்ள கோவில்களைப் பற்றியும் அவற்றின் வழிபாட்டைப்பற்றியும் அறிந்துகொள்வதோடு, அக்காலத்தில் இருந்த சமயப்பொறையைப் பற்றியும் அறிந்துகொள்ள உதவுகிறது. இக்கோவில்களைப்பற்றி ஆராய்வதாகக் இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

சிலப்பதிகாரக் காலத்தில் தமிழகத்தில் பலக்கோவில்கள் இருந்திருக்கின்றன. அவற்றில் சைவக்கோவில்களும், வைணவக் கோவில்கள், பௌத்தப் பள்ளிகளும், சமணப் பள்ளிகளும் இருந்திருக்கின்றன. அவற்றில் சிவபெருமான், திருமால், இந்திரன், முருகன், பலதேவன், அருகன், என பலதெய்வங்களுக்கும் வழிபாடுகள் நடந்துள்ளன. மேலும் சிலப்பதிகாரம் சமணக் காப்பியமாக கூறப்பட்டாலும் கண்ணகியும் கோவலனும் அனைத்து கோவில்களுக்கும் சென்று அனைத்து கடவுளரையும் வழிபட்ட செய்தியை அறியமுடிகிறது.

### புகார்நகரக் கோயில்கள்

சிலப்பதிகாரக் காலத்தில் பலக்கோவில்கள் இருந்தன. அவை பலத் தெய்வங்களுக்கான கோவில்களாக இருந்தன. காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரனுக்குத் தனிக்கோவில் இருந்தது. இந்திரன் படையான வச்சிராயுதம் நிற்கும் கோவில் அவன் வாகனமாகிய ஐராவதம் என்னும் யானை நிற்கும் கோவில் கற்பகத்தரு நிற்கும் கோவில் என இவைகள் தனிதனியாக இருந்தன.

**"வச்சிரக் கோட்டத்து மணம்கெழு முரசம்**
**சச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி**
**வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்**
**கால்கொள் விழவின் கடைநிலை சாற்றித்**
**தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து**
**மங்கல நெடும்கொடி வானுற எடுத்து"**

**- (சிலம்பு-இந்திர:141 146)**

வச்சிரக் கோட்டத்திலிருந்த முரசை ஐராவதம் நிற்கும் கோட்டத்துக்குக் கொண்டுவந்தனர். யானையின்மீது ஏற்றினர். இந்திர விழாவின் தொடக்கத்தையும் முடிவையும் அறிவித்தனர். கற்பகத்தருக் கோட்டத்திலிருந்த கொடியை வானிலே பறக்கும்படி ஏற்றினர். இவ்வாறு இந்திர விழாவில் கொடியேற்று விழாவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதனால் வச்சிரக் கோட்டம், ஐராவதக் கோட்டம், கற்பகத்தகுக் கோட்டம் முதலிய கோவில்களைக் காணலாம்.

### சைவ வைணவக் கோவில்கள்

சிலம்பு சமயசார்பற்ற காப்பியம் சிவபெருமான், முருகன், பலதேவன், திருமால் கோவில்கள் எல்லாம் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்தன என்ற செய்தியின் மூலம் அறியமுடிகிறது.

**"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**
**வால்மளை மேனி வாலியோன் கோயிலும்**
**நீலமேனி நெடியோன் கோயிலும்"**

**- (சிலம்பு-இந்திர:169-172)**

என்ற வரிகளில் ஒரு தாயின் வயிற்றிலே தங்கிப் பிறவாத தூய யாக்கையுடைய சிவபெருமான் கோயிலும், ஆறுமுகத்தையுடைய

செவ்வேள் அழகோடு விளங்கும் முருகன் கோயிலும், வெண்சங்கு போலும் மேனியையுடைய பலதேவனின் கோயிலும், நீலமேனியினையுடைய நெடுமாலின் கோயிலும், முத்து மாலைகள் தொங்கும் வெண்கொற்றக் குடையினை உடைய மன்னனின் கோயிலும் ஆகியவற்றில் மிக்க முதுமையுடைய முதல்வனான பிரமதேவனருளிய வேதங்களின் (நான்மறை) மரபுகளின்படியே திருமுறை வேள்விகளும் ஒருபால் நிகழ்ந்தன என்ற வரிகளின் மூலம் இக்கோயில்களின் சிறப்பை அறிந்துகொள்ள முடிகிறது.

**சமணப்பள்ளி**

அருகர் கோவிலுக்கு ஸ்ரீ கோவில் என்று பெயர் காவிரிப்பூம்பட்டினத்திலே வழங்கப்பட்டு இருந்தது. அருகர் பள்ளிகளும், புத்தர் பள்ளிகளும் இருந்தன. தருமங்களைப் போதிக்கும் வேறு இடங்களும் இருந்தன.

**"அறவோர் பள்ளியும் அறன் ஓம்படையும்**
**புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்"**
**- (சிலம்பு-இந்திர:179-180)**

என்பதனால் இதைக் காணலாம். புறநிலைக் கோட்டம் என்பது ஸ்ரீ கோவில் அருகன் கோவில் என்பதை அறிய முடிகிறது.

**பௌத்தப்பள்ளி**

நாடுகாண் காதையிலே புத்த விகாரங்களைப் பற்றியும் கூறப்படுகின்றன.

**"பணைஐந் தோங்கிய பாசிலைப் போதி**
**அணிதிகழ் நீழ லறவோன் திருமொழி**
**அந்தர சாரிக ளறைந்தனர் சாற்றும்**
**இந்திர விகாரம் மேமுடன் போகிப்"**
**- (சிலம்பு-நாடு:11-14)**

என்ற வரிகளில் ஐந்து கிளைகள் பொருந்திய மகாபோதி மரத்தின் கீழே ஞானம் பெற்றவர் புத்தர். அவருடைய அறவுரைகளைப் போதிக்கும் அந்த சாரிகள் வந்து அமர்ந்து புத்த தர்மங்களைப் போதிப்பார்கள். இத்தகைய இந்திர விகாரம் ஏழனையும் கோவலன் வணங்கினான். பின்பு கோவலன் பௌத்தப் பள்ளிகளை வணங்கியபின் அருகர்களின் சிலாதலத்தையும் வணங்கினான்.

"பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்
நீரணி விழவினும் நெடுந்;தேர் விழவினும்
சாரணர் வருஉந் தகுதியுண் டாமென
உலக நோன்பிக ளொருங்குட னிட்ட
இலகொளிச் சிலாததலந்; தொழுது வலங்கொண்டு"
- (சிலம்பு-நாடு:21 -25)

என்ற வரிகளில் அழகு மிகுந்த மலர்களையுடைய பிண்டியின் நிழலிலே, சாரணர்கள் அமரும் சிலாதலம் இருந்தது. அது நீராட்டு விழாவின் போதும் பெரிய தேர்விழாவின் போதும் சாரணர்கள் வந்து மக்களுக்கு அருக தர்மத்தை உபதேசிப்பார்கள் என்று கருதிச் சாவகர்களால் இடப்பட்டதாகும். இதனையும் கோவலன் வணங்கி வலம் வந்தான். என்ற செய்திகளின் மூலம் அருககோயிலினைப் பற்றியும் அறிய முடிகிறது.

**காவிரிப்பூம்பட்டினத்துக் கோவில்கள்**

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த கோவில்களைப் பற்றிக் கனாத்திறம் உரைத்த காதையிலும் உள்ளன. கற்பகத்தருக் கோயில், ஐராவதம் கோயில், பலதேவன் கோயில், சூரியன் கோயில் கைலாயக் கோயில், முருகன் கோயில் இந்திரன் கோயில், அருகன் கோயில் சந்திரன் கோயில் முதலிய கோயில்கள் காணப்படுகின்றன.

"அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்
உச்சிக் கிழான்கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நீலாக்கோட்டம.........."
- (சிலம்பு-கனாத்: 9-13)

இவ்வடிகளிலும் காவிரிப்பூம்பட்டினத்திலே இன்னின்ன கோயில்கள் இருந்தன என்பதைக் காட்டுகின்றன. மேலும் காவிரிப்பூம்பட்டினத்தில் பள்ளிகொண்ட பெருமான் கோவில் இருந்தது என்பதை,

"அணிகிள ரரவின் அறிதுயி லமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து"
- (சிலம்-நாடு:9-10)

என்ற வரிகளில் அழகிய பாம்புப்படுக்கையிலே யோக நித்திரை செய்து கொண்டிருக்கும் நீல மணி போன்ற நிறத்தையுடைய திருமால் கோயிலை வலம்செய்து நிங்கி என்பதில் கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்ட போது புகார் நகரிலே திருமால் கோவிலையும் வணங்கிப் புறப்பட்ட செய்தியையே மேலே காட்டிய அடிகள் குறித்தன. ஐயைக்குத் தனிக்கோயில் இருந்தது இதனை,

**"ஐயை கோட்டத் தெய்யா வொருசிறை**
**வருந்துநோய் தணிய இருந்தனர்"**
**- (சிலம்பு-வேட்டுவ: 4-5)**

என்ற வரிகளில் கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் மூவரும் ஐயைக் கோட்டத்திலே யாரும் போகாத ஒரு பக்கத்திலே வழி நடந்த வருத்தம் தீரத் தங்கியிருந்தனர்" என்ற செய்தியின் மூலம் ஐயைக் கோட்டத்தைப் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது.

**மதுரை நகரக் கோயில்கள்**

சிலம்பு மதுரைக் காண்டத்தில் மதுரையில் உள்ள கோயில் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் காண்டத்தில் குறிப்பிட்டதைப் போன்றே இங்கும் சிவபெருமான், திருமால், பலதேவன், முருகன், அறத்துறைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி அறிவுறுத்தும் சமணப்பள்ளி, புத்தப்பள்ளிகள் இருந்த செய்திகளை,

**"நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்**
**உவணச் சேவ லுயர்த்தோன் நியமமும்**
**மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்,**
**கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்,**
**அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்**
**- (சிலம்பு - ஊர் காண் :7-11)**

என்ற வரிகளில் அறியமுடிகிறது.

**"ஆடக மாடத் தறிதுயில் அமர்ந்தோன்"**
**- (சிலம்பு-காற்கோட் : 62)**

எனக் கால்கோள் காதையில் திருவனந்தபுரத்துக் கோயிலும் திருமாலின் பள்ளிகொண்ட கோலமும் கூறப்பட்டுள்ளன.

**முடிவுரை**

இதன் மூலம் சிலப்பதிகார காலத்திலே தமிழகம் முழுவதும் சிவன் கோவில், திருமால் கோவில், அருகன் கோவில், இந்திரன் கோவில், ஐயைக் கோவில், வச்சிராயுதக் கோவில், கற்பகத்தருக் கோவில், ஐராவதக் கோவில், பலதேவன் கோவில், சூரியன் கோவில், சந்திரன் கோவில் சாத்தன் கோவில், இன்னும் பேய், பிசாசு பூதங்களுக்கான கோயில்கள் மன்மதன் கோயில் திருமகள். கலைமகள் கோயில்களும் புத்தர் பள்ளி, அருகன் பள்ளிகளும் வேறு அறம் பேணிக்கும் சிலப்பதிகார காலத்தில் சிறுதெய்வ வழிபாடுகளும், பெருதெய்வவழிபாடுகளும் இருந்ததையும், காவிரிப்பூம்பட்டினம், சீரங்கம், உறையூர், திருவேங்கடம், மதுரை திருச்செந்தூர், திருமாலிருங்குன்றம், திருச்செங்குன்று, சுவாமிமலை, திருவேரகம், கச்சிநகர், திருவனந்தபுரம் போன்ற தலங்களின் பெயர்களும் அறிய முடிகிறது. மேலும் சிலம்பு சயணக்காப்பியமாக கூறப்பட்டாலும் கோவலனும் கண்ணகியும் அனைத்துக் கோயில்களுக்கும் சென்று வணங்கினர். என்பதில் இளங்கோவடிகள் அனைத்து கடவுளர்களையும் போற்றினார். என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

Acknowledgement Author Would Like To Thank The Management Of Nallamuthu Gounder Mahalingam College, Pollachi For Financial Assistance Through SEED MONEY Support.

**துணைநூல் பட்டியல்**

(1) அடியார்க்கு நல்லார். சிலப்பதிகாரம், கேசவர் அச்சுக்கூடம், சென்னை, 1927.

(2) புலியூர்கேசிகன். சிலப்பதிகாரம். சாரதா பதிப்பகம், ஜீ-4, சாந்தி அடுக்ககம், கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை – சென்னை -6000014 , முதல் பதிப்பு- 2011.

(3) புலியூர்கேசிகன். தொல்காப்பியம், பாரி நிலையம், சென்னை, 2012.

(4) வேங்கடசாமி நாட்டார், ந.மு. சிலப்பதிகாரம். ராமையா பதிப்பகம், ஜீ-4சாந்தி அடுக்ககம், கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை -6000014. முதல் பதிப்பு -2008.

(5) கழகத் தமிழகராதி, திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

(6) பி.எல் சாமி, தமிழ் இலக்கியத்தில் தாயத்தெய்வ வழிபாடு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை- 600098. மு.ப 1975.

(7) ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ஆசியன் எஜீகேசன் சர்வீநஸ், நீயூடெல்லி.

விலை : ரூ.

அகல் பதிப்பகம்

ISBN
9 788198 977472